வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 206/2021

வழக்கு சாட்சி LW2/PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காமராஜ் | ஜாதி | |
| கணவர்/தந்தை | B. காமராஜ் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 61 |

தேதி 02.12.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நாம் அம்பத்தூர் பகுதியில் குடியிருந்து வருகிறேன். நான் மாநகர போக்குவரத்து துறையில் நடத்துனராக பணியாற்றி பிப்ரவரி 2025 பணி ஓய்வு பெற்றுவிட்டேன். 30.03.2021 அன்று மாலை 6 மணியளவில் மீஞ்சூர் நோக்கி எங்களது பஸ் சென்றுக்கொண்டிருந்தது, அப்போது மஞ்சம்பாக்கம் தாண்டி சென்றுக்கொண்டிருந்த போது முன்னால் நின்றுக்கொண்டிருந்த பயணி ஒருவரிடம் டிக்கெட் கேட்டேன் அவர் தன்னை ஒயின் ஷாப்பில் இறக்கும் படி கூறினார். நான் நிற்காது என்றவுடம் சுடுகாட்டில் நிறுத்தச் சொன்னார். நானும் டிரைவரும் உடனே பேருந்தை லட்சுமி பெட்ரோல் பங்கில் நிறுத்தி அவரை இறக்கிவிட்டோம். உடனே அவர் டிரைவரிடம் சென்று அவரது சட்டையை பிடித்து இழுத்து அசிங்கமாக பேசி அடித்துவிட்டார். டிரைவருக்கு இடது கையில் சிராய்ப்பு காயம் ஏற்ப்பட்டது. நாங்கள் எங்களது ஆய்வாளருக்கு தகவல் கூறி அவர் வந்தவுடன் மாதவரம் காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம். டெப்போவில் இருந்து மற்றொரு டிரைவரை

வரவழைத்து பஸ்யை டெப்போவிற்கு எடுத்துச் சென்றுவிட்டேன். டிரைவர் மருத்துவமனைச் சென்றார். போலீசார் விசாரணைச் செய்தார்கள். ஆஜர் எதிரி தான் அன்று பிரச்சனைச் செய்த நபர் ஆவார்.

குறுக்கு விசாரணை

சம்பவ நேரம் அதிக கூட்டமுள்ள நேரம் என்றால் ஆமாம். எதிரி எந்த இடத்தில் ஏறினார் என்பது எனக்குத் தெரியாது என்றால் மஞ்சம்பாக்கம் லாரி பார்க்கிங். நான் பின்பக்கத்தில் இருந்து தான் டிக்கெட் போட்டுக் கொண்டுச் சென்றேன் என்றால் ஆமாம். கூட்டம் அதிகமாக இருந்த்தால் எதிரி எங்கு ஏறினார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. டிக்கெட் கேட்ட போது ஆதார் கார்டு, ஓட்டுநர் உரிமம் காட்டி பணம் எடுத்துக்கொள்ள கூறினாரா என்றால் இல்லை. எதிரி சரியான மனநிலையுடன் இருப்பவராக தெரிந்தாரா என்றால் எனக்குத் தெரியவில்லை. பேருந்தை எல்லா இடத்திலும் நிறுத்த அதிகாரம் எனக்கு உள்ளதா என்றால் இல்லை. வேண்டுமென்றே பயணியை இறக்கிவிட பேருந்தை நிறுத்தினோம் என்றால் இல்லை. கையில் பயணியிடம் காசு இல்லை என்றால் அடுத்த பேருந்து நிறுத்த்த்தில் தான் நிறுத்த வேண்டுமே அன்றி நடுவழியில் நிறுத்த முடியாது என்றால் ஆமாம். எதிரியை பேருந்து நிலையத்தில் தான் இறக்கிவிட்டோம். முதல் விசாரணையில் பேருந்து நிறுத்தத்தில் இறக்கியதாகக் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம் என்றால் ஆமாம். சிராய்ப்பு காயம் என்பதால் மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் வேண்டுமென்றே மருத்துவமனை சென்றோம் என்றால் சரியல்ல. புகாரை யார் எழுதினார்கள் என்றால் எங்களது போக்குவரத்து ஆய்வாளர் சுப்பிரமணி. சம்பவத்தைப் பற்றி சுப்பிரமணிக்கு தெரியாது என்றால் ஆமாம். வண்டியை இயக்கி இருக்கலாம் என்றாலும் வேண்டுமென்றே வண்டியை இயக்காமல் இருந்தோம்

என்றால் ஆய்வாளர் கூறியதால் மருத்துவமனை சென்று புகார் அளித்தோம். சாதாரண சம்பவத்தினை வேண்டுமென்றே பெரிய சம்பவமாக சித்தரித்தோம் என்றால் சரியல்ல. எதிரியை நடுவழியில் இறக்கியதால் அவர் சண்டையிட்டதால் வேண்டுமென்றே அவர் மீது பொய்யாக புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**